00020

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD3335/ESD1135 –** முன்பள்ளிக்கல்வி, ஆரம்பக்கல்வியில் ஒன்றிணைந்த அணுகுமுறை

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 29.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. ஒன்றிணைந்த கற்றல் - கற்பித்தல் அணுகுமுறையில் கணிப்பீட்டின் மூன்று (03) அனுகூலங்களை எழுதுக.
2. ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கணிப்பீட்டு பதிவுகளை பேணுவதன் மூன்று (03) அனுகூலங்களை சுருக்கமாக விபரிக்குக.
3. ஒன்றிணைந்த அணுகுமுறை கற்றல் - கற்பித்தலில் சிறப்பு அம்சங்களைக் குறிப்பிடுக.
4. பாரம்பரிய கற்றல் - கற்பித்தல் செயல்முறையினதும் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையினதும் வேறுபாடுகளை குறிப்பிடுக.
5. ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு பரிசோதனைகளினூடாகவும் ஆராய்வதினூடாகவும் அறிவைப் பெறுவதன் முக்கியத்துவத்தினை எழுதுக.
6. குழுச் செயற்பாடுகளில் முன்பள்ளி மாணவர்கள் ஈடுபடும் போது அவர்களில் வெளித்தெரியும் இயல்புகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.
7. இலங்கையின் ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தில் 1972ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பாடங்கள் எவை?
8. ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறை என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** "ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி" என்னும் பதத்தினை விளக்குக.

(02 புள்ளிகள்)

**ii.** ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சியின் குறிக்கோள்கள் மூன்றினைப் (03) பட்டியலிடுக.

(03 புள்ளிகள்)

iii. இலங்கையில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி வழங்க திட்டமிடும்போதும், அமுல்படுத்தும் போதும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?

(15 புள்ளிகள்)

10.

i. "ஒன்றிணைந்த அணுகுமுறை" என்னும் பதத்தினை வரையறுக்க.

(03 புள்ளிகள்)

ii. தரம் ஒன்று மாணவர்களுக்கு பொருத்தமாக ஒன்றிணைந்த அணுகுமுறைக் கற்பித்தலில் கற்பிக்க "சந்தை" எனும் கருப்பொருளில் கற்பிக்க பொருத்தமான பாடத்திட்டமிடலை எழுதுக.

(12 புள்ளிகள்)

iii. உமது பாடத்திட்டத்தினை அமுல்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்கள் **மூன்றினை** (03) எழுதுக.

(05 புள்ளிகள்)

11. "ஒன்றிணைந்த ஆணுகுமுறையானது கற்போர் செயல்மூலம் கற்கும் மாணவர் மைய அணுகுமுறையிலானது"

i. இலங்கையில் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையின் வரலாற்றினை எழுதுக.

(03 புள்ளிகள்)

ii. ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையின் அனுகூலங்களை குறிப்படுக.

(05 புள்ளிகள்)

iii. ஒன்றிணைந்த அணுகுமுறைக் கற்பித்தலுக்கு கருப்பொருளை தெரியும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

12.

i. "செயலடைவுக் கோவை" எனபதனால் கருதப்படுவது யாது?

(06 புள்ளிகள்)

ii. கணிப்பீட்டு முறையாக செயலடைவுக் கோவையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(14 புள்ளிகள்)

13.

i. 1972ஆம் ஆண்டு இலங்கையில் ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையினை அமுல்படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட பாடங்கள் எவை?

(03 புள்ளிகள்)

ii. ஒன்றிணைந்த அணுகுமுறையை அமுல்படுத்துவதற்காக இப்பாடங்கள் ஏன் தெரிவு செய்யப்பட்டனவென விளக்குக.

(05 புள்ளிகள்)

iii. பொருத்தமான வகுப்புக்களுக்கு ஒன்றிணைந்த அணுகுமுறை எவ்வாறு அமுலாக்கப்பட்டதென பரிசீலிக்க.

(12 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -